பக்கங்கள் 16+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 23 செவ்வாய்க்கிழமை 06.05.2025 | அதிர்வு 276

## நாட்டுக்கு திரும்பியதும் வாக்களித்த ஜனாதிபதி



வெசாக் விழாவில் கலந்துகொள்ள வியட் நாம் சென்றிருந்த ஜனா திபதி அநுரகுமார திஸ ாநாயக்க, இன்று காலை வியட்நாமில் இருந்து இலங்கைக்குத் 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# அமைதியான தேர்தல்

## சற்று நேரத்தில் வாக்கு எண்ணும் நடவடிக்கை ஆரம்பம்

**இலங்கையில் இன்று உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைதியாக நடைபெற்றது.**

**காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பொதுமக்கள் தங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்குகளை சுமுகமாக அளித்தனர்.**

**கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் போல் இன்று நடை பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலும் அமைதியாக இடம்பெற்றது.**

28 மாநகர சபைகள், 36 நகர சபைகள், 275 பிரதேச சபைகள் என மொத்தம் 339 உள்ளூராட்சி சபைகளுக்கு இந்தத் தேர்தல் நடைபெற்றது.

8 ஆயிரத்து 257 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தலில் 75 ஆயிரத்து 589 பேர் போட்டியிட்டனர்.

நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 877 உள்ளூராட்சி சபை வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ள 13 ஆயிரத்து 759 வாக்களிப்பு மத்திய நிலையங்கள் ஊடாக இன்று வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

வாக்கெண்ணும் பணிகளுக்காகத் தொகுதி மட்டத்தில் 5 ஆயிரத்து 783 மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் சற்று நேரத்தில் குறித்து வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படவுள்ளன.


# வட, கிழக்கில் வாய்ப்பு ஜே.வி.பிக்கு இல்லை!

## தமிழர்களின் கைகளிதான் நிர்வாகங்கள்
## வாக்களித்த பின் செல்வம் எம்.பி. உறுதி

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

எங்களைப் பொறுத்தவரை வடக்கு, கிழக்கை இம்முறையும் தமிழர்கள்தான் ஆளப் போகிறார்கள்.ஜே.வி.பி. ஒரு தடவை கூட இங்கு ஆள வாய்ப்பில்லை என உறுதிபட தெரிவிக்க விரும்புகின்றார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

விடத்தல் தீவு தூய யோசேவாஸ் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று தனது வாக்கை செலுத்திய பின்னர் 02▶



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# வேட்பாளரைத் தாக்கிச் சங்கிலி அறுப்பு

## பொலிஸாரிடம் முறைப்பாடு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், காரைநகர் பிரதேச சபையில் மான் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளரும் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கணேசபிள்ளை பாலச்சந்திரனை வழிமறித்து அவர் பயணித்த மோட்டார் வாகனத்தைத் தாக்கிச் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது .

மேற்படி வேட்பாளர் நேற்று இரவு மோட்டார் வாகனத்தில் வீதியால் பயணித்த வேளை அரசியல் கட்சி யொன்றின் வேட்பாளர் ஒருவரும் மற்றுமொருவரும் இணைந்து மோட்டார் வாகனத்தைத் தாக்கி அவர் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியையும் அறுத் துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவரால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், காரைநகருக்கு விரைந்த பொலிஸார் மேற்படி இருவருக்கும் எதிராக முறைபாட்டைப் பதிவு செய்து சென்றுள்ளனர்.

### வட, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எங்களுடைய பிரதேசங்களை நாங்கள் தான் ஆளவேண்டும். வடக்கு கிழக்கிலே பிரதேச சபை,நகர சபை, மாநகர சபை என அனைத்தையும் தமிழர்கள் கைப்பற்றுவார்கள்.

குறிப்பாக எங்கள் சங்கு சின்னம் ஆட்சியை நிர்ணயிக்கும் நிலையில் இருக்கும்.

தேசியத்தை நேசிக்கும் தமிழ் தரப்புக்களுடன் மாத்திரமே ஆட்சி அமைப்பதற்கான பேச்சுவார்த்தை நடைபெறும். அந்த வகையில் வடக்கு கிழக்கில் தமிழர்களின் ஆட்சி தான் நடக்கும். என்.பி.பி யின் ஆட்சி ஒருபோதும் நடக்காது என்பதை தெட்டத் தெளிவாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். – என அவர் மேலும் தெரிவித்தார்.





### நாட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிய கையோடு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களித்தார்.

தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவதற்காக, விமானத்தில் இருந்து தரையிறங்கிய சிறிது நேரத்திலேயே ஜனாதிபதி தனது வாக்குச் சாவடிக்கு வந்து வாக்களித்தார்.

கொழும்பு, பஞ்சிகாவத்த அபே சுந்தர ராமய விகாரையில் அவர் தனது வாக்கினை அளித்தார்.




# யாழில் சுமுகமான வாக்களிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று சுமுகமாக நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் ஒரு மாநகர சபை, 3 நகர சபைகள் மற்றும் 13 பிரதேச சபைகள் என்ற கட்டமைப்பில் 17 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது.

குறித்த இந்தச் சபைகளில் உள்ள 243 வட்டாரங்களில் இருந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 3 ஆயிரத்து 519 வேட்பாளர்கள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களில் இருந்து போட்டியிட்டனர்.

மக்கள் தமது வாக்குகளை அளிப்பதற்காக 517 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 இலட்சத்து 98 ஆயிரத்து 140 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சென். ஜேம்ஸ் பாடசாலையிலும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் குடத்தனை பாடசாலையிலும், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் ஆகியோர் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட அத்தியடி கணபதி கலாசார மண்டபத்திலும் தமது வாக்குகளைச் செலுத்தச் சென்றமையைப் படங்களில் காணலாம்.













# ஜனநாயக ரீதியில், அமைதியான தேர்தலுக்கு அனைவரையும் கைகோர்க்க சஜித் அழைப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஜன நாயக ரீதியாகவும், அமைதியான முறையிலும், நீதி நியாயமாகவும் நடக்கும் என எதிர்பார்க்கிறோம். மக்களின் உரிமைகளை முதன்மைப்படுத்தும் சுதந்திரமான தேர்தலாக அமையட்டும். சுதந்திரமாக மக்கள் தங்கள் கருத்துகளையும் விருப்பங்களையும் தெரிவிக்க சந்தர்ப்பம் கிட்டட்டும். கிராமங்களினதும் நகரங்களினதும் அதிகாரத்தை யாருக்கு வழங்குவது என்பதை தீர்மானிக்க இந்நாட்டு மக்களுக்கு வாய்ப்பு கிட்டியுள்ளது. மக்கள் இதனை சரியாக பயன் படுத்துவார்கள் என நான் நம்புகிறேன். ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்ற பிறகு, கிராமங்களைக் கட்டியெழுப்பி, நகரங்களைக் கட்டியெழுப்பி, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா தெரிவித்தார்.

மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அரசியல் செய்தியை சரியான நேரத்தில் மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளோம். தீர்மானம் எடுக்க வேண்டியது மக்களே. எனவே, சுதந்திரமானதும் நியாயமானதுமான ஜனநாயகம் மிக்க தேர்தலுக்காக அனைவரும் கைகோர்க்க வேண்டும். மக்கள் எடுக்கும் முடிவுக்கு சகலரும் மதிப்பளிக்க வேண்டும். தேர்தல் சட்டங்களை மீறாமல் நடந்து கொள்ள வேண்டும். இந்த ஜனநாயகத்தை உரிய முறையில் செயல்படுத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2025 நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று காலை ஆரம்பமானது. எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவருமான சஜித் பிரேமதாச இன்று காலை ராஜகிரிய, கொடுவேகொட விவேகாராம விகாரை, சந்திரலோக தஹம் பாடசாலை கட்டிடத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கைப் பதிவு செய்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.





# மன்னார் மாவட்டத்தில் சகல சபைகளிலும் அதிக ஆசனங்களைக் கைப்பற்றுவோம்!

## ரிஷாட் பதியுதீன் எம்.பி. நம்பிக்கை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து சபைகளிலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து தொலைபேசி சின்னத்தில் போட்டியிட்டு வரும் நிலையில் அனைத்து சபைகளிலும் அதிகூடிய ஆசனங்களைப் பெற்று கொள்வோம் என்ற நம்பிக்கை உள்ளதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்

இன்றைய தினம் மன்னார் தாராபுரம் அல் மினா மகா வித்தியாலயத்தில் தனது வாக்கை செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து சபைகளிலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து தொலை பேசி சின்னத்தில் போட்டியிட்டு வரும் நிலையில் அனைத்து சபைகளிலும் அதிகூடிய ஆசனங்களைப் பெற்று கொள்வோம்.

மன்னார் மாவட்டத்தில் இம்முறையும் சுமூகமான முறையில் வாக்குப்பதிவுகள் இடம்பெற்று வருகின்றன எனவும், அதே நேரம் தேர்தல் முடிவுகள் வெளி வந்த பின்னர் யாருடன் இணைந்து ஆட்சி அமைப்பது அல்லது யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் கலந்தாலோசிக்க உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்










# திருகோணமலையில் எம்.பிக்கள் வாக்களிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட ஆளும் மற்றும் எதிர்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய உள்ளூராட்சி தேர்தலுக்கான வாக்குகளை செலுத்தினர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சண்முகம் குகதாசன்,தேசிய மக்கள் சக்தியின் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா மற் றும் அக்மீமன ரொஷான் பிரிய சஞ்ஞன, ஐக்கிய மக்கள் சக்தியின் இம்ரான் மஃரூப் ஆகியோர் வாக்களிக்கச் சென்ற சமயம் எடுக்கப்பட்ட படங்கள்.





# தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் வள்ளிபுனம் பகுதியில் வைத்து ஒருவர் கைது!





(பா. சதீசன்)

தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் வள்ளிபுனம் பகுதியில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இன்றையதினம் காலை இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் வாக்குசாவடிக்கு அண்மித்த பகுதியில் வீட்டு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளரின் ஆதரவாளர் ஒருவரை சின்னம் அடங்கிய துண்டுபிரசுரத்தை மக்களுக்கு விநியோகம் செய்த குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பு பொலிஸார், தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து கைது செய்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் அழைத்துச் சென் றனர்.

குறித்த சம்பவத்தில் வீட்டு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளரின் ஆதரவாளரான 38 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கு - கிழக்கில் கூடுதல் இடங்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றும்

## ரவிகரன் எம்.பி. நம்பிக்கை

**(விஜயரத்தினம் சரவணன்)**

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நான்கு உள்ளூர் அதிகார சபைகளையும் கைப்பற்றுவதுடன், வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திலும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி அதிக இடங்களைக் கைப்பற்றும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவு – கள்ளப்பாடு வடக்கு, பொதுநோக்கு மண்டபத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கைச் செலுத்தியபின்னர் ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

எனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றிவிட்டேன். நிச்சயமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகமான வட்டாரங்களில் வெற்றியீட்டி, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நான்கு உள்ளூர் அதிகாரசபைகளையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றும்.

அத்தோடு வடக்கு, கிழக்கில் எமது இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி அதிகமான இடங்களைக் கைப்பற்றும் என்பதையும் திடமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தல் முடிவுகள்

நாடு முழுவதும் குட்டிப் பொதுத் தேர்தல் போல நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களின் வாக்களிப்பு முடிவடைந்துவிட்டது. வட்டார ரீதியில் வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பித்துத் தொடரும் நிலைமை.

தேசிய ரீதியில் நடத்தப்பட்ட 339 உள்ளூராட்சி மன்றங்களில் கட்சிகள் பெற்ற நிலைவரம் - பெறுபேறுகள் - இன்று முன்னிரவு அளவில் தெரிய வரும்.

தற்போதைய தேர்தல் முறைமைகளின் கீழ் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் உள்ளூராட்சி சபைகளில் தனித்துப் பெரும்பான்மையைப் பெறுவது அனேகமாக சாத்தியமற்றது. ஆகையினால் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தங்களுக்குள் ஒன்றிணைந்து தான் நிர்வாகத்தைக் கைப்பற்ற வேண்டிய கட்டாயம் பெரும்பாலும் இருக்கும்.

அதனால் உள்ளூராட்சி மன்றங்கள் தோறும் நிர்வாகத்தை கைப்பற்றுவதற்கான பேரங்களும், குதிரையோட்டங்களும் இன்று பின்னிரவிலேயே தொடங்கி விடும் என்று எதிர்பார்க்கலாம். அடுத்து வரும் நாள்களில் இந்த பேரமும், குதிரை ஓட்டமும், தரப்புகளை விலைக்கு வாங்கும் வர்த்தகமும் பெரிய அளவில் கட்டவிழும் என்றும் எதிர்பார்க்க முடியும். சபைக்குச் சபை கூட்டுக்கள், தரப்புக்களின் அணிசேரல்களும் தலைகீழாக மாறியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

தேசிய மட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில் வென்று, பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்குக்கும் மேற்பட்ட வெற்றியை ஈட்டிய தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு அலை அப்படியே நீடிக்கின்றதா அல்லது மங்கிப் பின் தங்கி விட்டதா என்பது பெரும்பாலும் இன்று நள்ளிரவுக்கு பின் தெளிவாகும். எதிர்க்கட்சிகளில் தேறி மிஞ்சப் போகின்றவை எவை என்பதை இன்றைய தேர்தலின் முடிவுகள் ஓரளவுக்கு சுட்டிக்காட்டும்.

வடக்குக் கிழக்கை பொறுத்தவரை - தமிழர் தாயகத்தை பொறுத்தவரை - கடந்த பொதுத் தேர்தலோடு தனது தமிழ் தேசியத்தை கைவிட்டு இலங்கை தேசியத்துக்குள் கரைந்த அதன் நடவடிக்கை மீண்டும் உறுதிப்படுத்தப்படுமா அல்லது தமிழ் தேசியத்தை காப்பதற்காக அது மீண்டெழுமா என்ற தலைவிதியை இன்றைய தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும் என உறுதி கூறலாம்.

தேசிய மக்கள் சக்தியை ப்பொறுத்தவரை வடக்கு, கிழக்கில் - குறிப்பாக வடக்கில் - அதற்குக் கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் எதிர்பாராமல் கிட்டியவையா அல்லது தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தி எழுப்பிய இலங்கை தேசம் என்ற கூக்குரலுக்குள் அடங்கி விட்டனரா என்பதை உறுதிப்படுத்தும் வாக்களிப்பாக இன்றைய தேர்தல்களின் முடிவுகள் நமக்குத் தெளிவுபடுத்தும்.

தமிழ் தேசிய தலைவர் என்று போற்றப்படும் பிரபாகரனை தேசிய மக்கள் சக்தியின் சில தரப்புகள் ‘தோழர் பிரபாகரன்’ போல மாற்றி, பிரச்சாரத்திற்கு பாடல்களும் பயன்படுத்தி மேற்கொண்ட நகாசு வேலைகளுக்கு தமிழர் தாயகம் - வடக்கு இலங்கை - விலை போய் விட்டதா என்பதை இன்றைய தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும்.

முன்பின் நடக்காத புதுமை போல கடந்த பொதுத் தேர்தலில் வடக்கில் - குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் - தென்னிலங்கை கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் அளித்த ஆதரவை சுவரொட்டிகள் குறிப்பிட்டவை போல மூன்று கோமாளிகளும் ஒரு ரவுடி அமைச்சரும் போட்டடித்துச் சின்னாபின்னமாக்கிவிட்டார்களா அல்லது அந்த ஆதரவை பெருக்கிக் கொண்டார்களா என்பதை தீர்மானிக்கும் விவகாரமாகவும் இன்றைய தேர்தல் முடிவுகள் அமையும்.

மொத்தத்தில் வடக்கு உட்பட்ட தமிழர் தாயகத்தில் தேர்தல் முடிவுகளை ஒட்டி தமிழ்த் தேசியக் கட்சிகளும் நாட்டின் ஜனாதிபதியும் தீர்க்கமான சில முடிவுகளை எடுத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தூண்டல்களை இன்றைய தேர்தலில் முடிவுகள் தரும் என்று எதிர்பார்ப்பது சரியானதே.



# 2025 புத்தாக்கக் கண்காட்சிக்கு புதிய தயாரிப்புகள் அறிமுகம்

## தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை

**(மஸ்கெலியா )**

2025 ஆம் ஆண்டுக்கான புத்தாக்க கண்காட்சிக்காக, தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், சிறப்பு தேயிலை வகைகளாக தேயிலை சாஸ் மற்றும் சோப்பு போன்ற புதிய தயாரிப்பு களையும், சிறப்பு மற்றும் கைவினைஞர் தேயிலை தயாரிப்புகளுக்குப் பயன் படுத்தக் கூடிய மதிப்பு கூட்டப்பட்ட தேயிலை தயாரிப்புகளையும் அறி முகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

கூடுதலாக, ஆர்தர் சி. கிளார்க் மையம் மற்றும் தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுத் திட்டமாக வடிவ மைக்கப்பட்ட தேயிலை இலைகளை முறையாகத் தேர்ந்தெடுத்து பறிப்பதற் கான ஒரு புதிய இயந்திரம் இந்த கண் காட்சியில் வழங்கப்பட்டது.

இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணையத்தால் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் மேற்பார் வையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட 13 ஆவது வருடாந்தக் கண்டுபிடிப்பு கண்காட்சி சமீபத்தில் சிறிமாவோ பண் டாரநாயக்க கண்காட்சி மண்டபத்தில் மூன்று நாள்கள் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியில் தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் டாக்டர் தனஞ் சய கோட்டவராச்சி, டாக்டர் சி. ஆகியோர் புதுமையான தயாரிப்புகளை வழங்கினர்.

ஜே.லியனாராச்சி, கலாநிதி சம்பத் பத்திரனகே, எல்.ஜெயசிங்க, ஜே. டபிள்யூ.வெலகெதர மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



# டாக்டர் ஷாபியின் அநீதிக்கு எதிரான போராட்டம் நூல் வெளியீடு

சிரேஷ்ட ஊடகவியலாளரும் பன்னூ லாசிரியருமான அஷ்ரஃப் சிஹாப்தீன் எழுதிய ‘டாக்டர் ஷாபியின் அநீதிக்கு எதிரான போராட்டம்’ என்ற நூல் வெளி யீடு எதிர்வரும் 09 ஆம் திகதி வெள் ளிக்கிழமையன்று மாலை 4 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத் தொகுதியில் உள்ள ‘ஜெஸ்மின்’ அரங்கில் நடைபெறவுள் ளது.

அப்றார் பவுண்டேஷன் நிறுவனத் தலைவர் டாக்டர் ரயீஸ் முஸ்தபா தலை மையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூஸுஃப் கலந்து கொள்ளவுள்ளார். சிரேஷ்ட சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, முன் னாள் மேல்மாகாண ஆளுநர் அல் ஹாஜ் அஸாத் சாலி ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

நூல் பற்றிய கருத்துரையை ஆசிரி யையும் இலங்கைத் திறந்த பல்கலைக் கழக வருகைதரு விரிவுரையாளருமான திருமதி சுமையா ஷரிப்தீன் வழங்க ஐ.நாவுக்கான இலங்கையின் முன் னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியான ஏ.எல்.ஏ. அஸீஸ் ‘நூல் கடந்த நோக்கு’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்த வுள்ளார்.

பதிலுரைகளை டாக்டர் ஷாபி சிகாப் தீன், நூலாசிரியர் அஷ்ரஃப் சிஹாப்தீன் ஆகியோர் நிகழ்த்துவர். வரவேற்பு ரையை செல்வி ஸெய்னப் ஷாபி நிகழ்த்துவார். திருமதி ஆஷிகா பர் ஸான் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங் கவுள்ளார்.

# வல்வை. கம்பர்மலை பகுதியில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம் கம்பர்மலை பகுதியில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.


அல்வாய் வடமத்தி பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நண்பர்களுடன் சென்ற நிலையில், குறித்த சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படுகின்றது. இறப்புக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை.

சடலம் உடற்கூற்று சோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# தேர்தல் சட்ட விதிகளை பிரதமர் மீறினார் என பவ்ரல் குற்றச்சாட்டு



உள்ளூராட்சித் தேர்தலின்போது வாக்களிப்புக்கு முந்தைய அமைதிக் காலத்தின் போது பிரசாரத்தை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் கட்சி ஆதரவாளர்களுக்கு வழிகாட்டும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் அண்மைய அறிக்கையை தேர்தல் கண்காணிப்புக்கான 'பவ்ரல்' அமைப்பு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளது.

தேசிய மக்கள் சக்தி கட்சியின் ஆதரவாளர்களிடம் நுட்பமான வழிகளில் பிரசாரத்தை மேற்கொள்ளலாம் என அமைதிக் காலம் ஆரம்பிப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் மொரட்டுவ பகுதியில் இடம்பெற்ற அரசியல் பேரணியில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, கூறியமையை பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

"இன்னும் 04 மணி நேரத்தில் அமைதி காலம் ஆரம்பமாகிறது. ஆனால் நீங்கள் அமைதியாக இருக்கத் தேவையில்லை.தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளலாம். சில வார்த்தைகளை உரக்கச் சொல்லலாம்" என்று பிரதமர் கூறியிருந்தார்.

இந்நிலையில் அமைதி காலத்தில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வது தேர்தல் சட்டத்தை மீறுவதாகும் என சுட்டிக்காட்டிய பவ்ரல் அமைப்பு பிரதமரின் அறிக்கை தேர்தல் சட்டத்தை மீறுவதாகவும், சட்டத்தை புறக்கணிப்பதாகவும் கருதுகிறது.

பிரதமரின் அவ்வாறான அறிக்கை நாட்டின் சிறந்த அரசியல் கலாசாரத்திற்கு அச்சுறுத்தல் என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு இந்த அறிக்கை அச்சுறுத்தலாகக் கருதப்பட்டதால், விசாரணை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.



# தனது சொந்த ஊரில் வாக்களித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் இன்று (06) காலை 7 மணிக்கு அரம்பமாகியது.


இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தனது வாக்கைப் பதிவு செய்துள்ளார்.

சிறிதரன் சொந்த இடமான கிளிநொச்சி, வட்டக்கச்சி, மாயவனூர் பகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கைப் பதிவு செய்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளில் உள்ள 40 வட்டாரங்களையும் வென்று கிளிநொச்சி மக்களின் ஆணையுடன் அரசியலையும் அபிவிருத்தியையும் மேற்கொள்வோம் என சிறிதரன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையாங்களில் தமது வாக்கை மக்கள் மிகவும் ஆர்வத்துடன் பதிவு செய்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்று பிரதேச சபைகளுக்கான கரைச்சி, பூநகரி, பச்சிளைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளுக்காக 40 வட்டாரங்களில் 108 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடவடிக்கைகள் அமைதியான முறையில் ஆரம்பமாகியுள்ளன.



# வெலிக்கடைச் சிறைச்சாலையின் வடிகால் அருகில் கைத்துப்பாக்கி!

வெலிக்கடைச் சிறைச்சாலையின் கழிவுநீர் வடிகால் ஒன்றின் அருகே இருந்து கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப் பட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் எல் வார்ட் அருகே வழிந்தோடும் கழிவு நீர் வடிகால் அருகில் சேர்ந்திருந்த மண்ணை அகற்ற முனைந்தபோதே அதற்குள் இருந்து குறித்த கைத்துப் பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கைத்துப்பாக்கி 0.38 ரக கைத்துப்பாக்கி என்றும் பல வருடங் களாக மண்ணுக்குள் புதையுண்டு கிடந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப் படுகின்றது.

சிறைச்சாலை நிர்வாகம் அளித்த தகவலின் பேரில் பொரளை பொலிஸ ார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து கைத்துப்பாக்கியை மீட்டுள்ளனர்.

சம்பவம் குறித்த மேலதிக விசார ணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

# தேர்தல் பணிக்குச் சென்றிருந்த அரச பெண் அதிகாரி உயிரிழப்பு

கண்டி, பேராதனை பொலிஸ் பிரிவில் உள்ள கன்னொருவ ஆரம்ப பாடசாலையில் தேர்தல் பணிக்காகச் சென்ற அரச பெண் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதிகாரிக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாகப் பேராதனை போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் நேற்று மாலை 5 மணியளவில் தேர்தல் பணிக்காக வருகைத்தந்திருந்தார்.

இந்த நிலையில் சுகவீனமுற்ற நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த அதிகாரி கன்னொருவ தாவர மரபணு வள மையத்தின் மேம்பாட்டு அதிகாரி என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் கலகெதர, மினிகமுவ பகுதியைச் சேர்ந்த கிருஷாந்தி குமாரி தசநாயக்க (வயது -33) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# அமைதியான முறையில் நடைபெறும் மன்னார் மாவட்டத்தில் வாக்குப் பதிவு

## தெரிவத்தாட்சி அலுவலர் க.கனகேஸ்வரன் தெரிவிப்பு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட், வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் வாக்களிப்புக்கள் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்று வருகின்ற நிலையில் காலை 7 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை 38.43 வீத வாக்குகள் பதிவாகி உள்ளன என்று மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் இன்று (6) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் மிகவும், அமைதியாகவும் சுமூகமான முறையிலும் இடம் பெற்று வருகிறது.

மாவட்டத்தில் 91 ஆயிரத்து 373 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் 144 வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்களிப்புகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை(6) மதியம் 12 மணி வரை மன்னார் மாவட்டத்தில் 38.43 வீத வாக்குகள் பதிவாகி உள்ளது.

மன்னார் நகர சபை பிரிவில் 34.79 வீத வாக்குகளும், மன்னார் பிரதேச சபை பிரிவில் 37.02 வீத வாக்குகளும், நானாட்டான் பிரதேச சபை பிரிவில் 40 வீத வாக்குகளும், முசலி பிரதேச சபை பிரிவில் 45 வீத வாக்குகளும், மாந்தை மேற்கு பிரதேச சபை பிரிவில் 36 வீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

மதியம் 12 மணி வரை மன்னார் மாவட்டத்தில் 35 ஆயிரத்து 111 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

இது 38.43 வீத வாக்குகளாகக் காணப்படுகிறன. மேலும் மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் இன்று வரை 32 தேர்தல் முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

எவ்வித பாரதூரமான முறைப்பாடுகளும் இல்லை. சாதாரண சட்டத்துடன் தொடர்புடைய முறைப்பாடுகளே கிடைக்கப் பெற்றுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் எவ்வித அசம்பாவிதங்களும் இன்றி அமைதியான முறையில் தேர்தல் இடம்பெற்று வருகின்றது.- என்றார்.



# தக்காளி, கரட் விலைகள் 1000 ரூபாவை எட்டின!

யாழ்ப்பாணம், வடமராட்சி மரக்கறி சந்தைகளிகளில் மரக்கறிகளின் விலைகள் சடுதியாக உயர்ந்துள்ளன.

அந்தவகையில் ஒரு கிலோகிராம் தக்காளி மற்றும் கரட் என்பன 1000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்று சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கத்தரி 600 முதல் 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப் படுகின்றது.

பச்சை மிளகாய் மட்டும் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.



# அட்டாளைச்சேனை பிரதேச உள்ளக வீதிகள் முன்னாள் எம்.பி. ஹரீஸின் நிதியில் திருத்தம்

(நூருல் ஹுதா உமர் )

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பி – 100 திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத் திட்டங்களை மாவட்டம் முழுவதும் முன்னெடுத்து வருகிறார்.

அதன் ஒரு அங்கமாக அட்டாளைச்சேனை பிரதேச உள்ளக வீதிகள் மக்கள் பாவனைக்கு பொருத்தமற்றதாக உள்ளதை நிவர்த்திக்கும் வகையில் தனது பி – 100 திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை 16 பிரிவின் ஈஸ்ட் வீதி மற்றும் உடையார் குறுக்கு வீதி களை கொங்கிறீட் வீதிகளாக புனர மைக்க சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் கொங்கிறீட் வீதிகளாக புனரமைக்கப்பட்டுள்ள இந்த வீதியை முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் நேரில் சென்று பார்வையிட்டார். மேலும் இந்த பிரதேசத்தில் முன்னெடுக்க வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இந்த விஜயத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ், ஆலோசகர் எம்.ஜே. எம். அன்வர் நௌஸாத், வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல். நூருல் ஹுதா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# நவீன் திஸாநாயக்க தனது வாக்கினை அளித்தார்

(க.கிஷாந்தன்)

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான நவீன் திஸாநாயக்க தனது வாக்குப் பதிவை நுவரெலியாவில் உள்ள நல்லாயினபற்று மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள வாக்கு சாவடியில் அளித்தார்.

# தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் வலியுறுத்தல்



இந்தியா - இலங்கை மீனவர்கள் நல்லிணக்கத்தின் மூலமும், இரு நாடுகள் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலமும், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என்று ஆந்திர துணை முதல்வரும், ஜனசேனா கட்சித் தலைவருமான பவன் கல்யாண் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“சமீபத்தில் 5 வெவ்வேறு சம்பவங்களில், 24 இந்திய மீனவர்கள் இன்னல்களுக்கும், தாக்குதலுக்கும் உள்ளாகியிருப்பது மிகவும் கவலையளிக்கிறது. குறிப்பாக நாகப்பட்டினத்தைச் சேர்ந்த நமதுமீனவர்கள்தாக்குதலுக்குள்ளாகி, காயமடைந்து, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது மிகுந்த கவலையளிக்கிறது.

இந்தியா மற்றும் இலங்கை இடையே உள்ள தூதரக நல்லுறவுகளை அடிப்படையாகக் கொண்டு, இது போன்ற சம்பவங்கள் தொடராமல் இருக்க, நமது வெளியுறவுத் துறை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் மூலமும், பரஸ்பர ஒத்துழைப்பின் மூலமும், இரு நாடுகளும் இது போன்ற நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாத வகையில் துரிதமான தீர்வை காண வேண்டும். எல்லைகள் மதிக்கப்பட வேண்டும். அதே வேளையில், இரு நாடுகளின் மீனவர்களின் கண்ணியமும், மனித உரிமைகளும் பாதுகாக்கப்பட்டு, நல்லிணக்கத்தின் மூலமும், பரஸ்பர ஒத்துழைப்பின் மூலமும், மீனவர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளார்,

முன்னதாக, கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டை மீனவக் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி, ரூ.10 லட்சம் மதிப்பிலான வலை, ஜிபிஎஸ் கருவி, மீன்கள் போன்றவற்றை பறித்துச் சென்றனர். இதில், 20 மீனவர்கள் காயமடைந்தனர். இந்நிலையில்தான் பவன் கல்யாண் அறிக்கை விடுத்துள்ளார்.

# மின்னல் தாக்கி 7 பேர் உயிரிழப்பு



இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் மின்னல் தாக்கி 07 பேர் உயிரிழந்துள்ளனர்.

தொடரந்து ஆந்திரா மாநிலத்தில் பலத்த மழை பெய்யும் சாத்தியமுள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனிடையே வெள்ளத்தால் விவசாய நிலங்கள் பாரியளவில் சேதமடைந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

# மத்திய அரசு நடவடிக்கைக்கு முழு ஆதரவு: காங். பொதுச் செயலர் பிரியங்கா தகவல்



பஹல்காம் தாக்குதல் விவகாரத்தில் மத்திய அரசின் நடவடிக்கைக்கு முழு ஆதரவு அளிப்போம் என காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, தனது வயநாடு மக்களவை தொகுதிக்கு 2 நாள் பயணமாக சென்றுள்ளார். இந்நிலையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த பிரியங்காவிடம் பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து கேட்கப்பட்டது. அப்போது அவர் கூறும்போது,

“சமீபத்தில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதில், பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடையவர்கள் மீது மத்திய அரசு எத்தகைய நடவடிக்கை எடுக்க முடிவு எடுத்தாலும் அதற்கு முழு ஆதரவு அளிப்பது என கூறப்பட்டுள்ளது. மத்திய அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறோம்” என்றார்.

முன்னதாக, வயநாடு தொகுதியில் உள்ள சுல்தான் பாதரி நகரில் உள்ள வனத்துறை மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வன விலங்குகளுக்கான ஆம்புலன்ஸ் சேவையை பிரியங்கா தொடங்கி வைத்தார். இதற்காக மக்களவை தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 15 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. பின்னர் வனத் துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, விலங் குகள் மருத்துவமனையை பிரியங்கா பார்வையிட்டார்.

# இந்தியா - பாகிஸ்தான் மோதல் தவிர்க்கப்பட வேண்டும்: ஐ.நா பொதுச் செயலாளரிடம் பாக். பிரதமர் வேண்டுகோள்



இந்தியா - பாகிஸ்தான் இடையேயான மோதல் தவிர்க்கப்பட வேண்டும் என்று ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெர்ஸிடம், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை அடுத்து பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இராணுவ ரீதியாக பதிலடி கொடுப்பதற்கு ஏற்ப இந்திய இராணுவத்துக்கு முழு சுதந்திரத்தை பிரதமர் நரேந்திர மோடி கொடுத்துள்ளார். இதனால், பாகிஸ்தான் அச்சமடைந்துள்ளது.

இந்த விவகாரத்தில் சுதந்திரமான, வெளிப்படையான, நடுநிலையான மற்றும் நம்பகமான விசாரணைக்குத் தயார் என ஏற்கனவே தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், இந்த விசாரணையில் இணைய சீனா, ரஷ்யா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில், பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தை அடுத்து 2 ஆவது முறையாக ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெசிடம், ஷெபாஸ் ஷெரீப் தொலைபேசி மூலம் பேசி உள்ளார். இது தொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தியில்,

"பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெர்ஸ் உடன் திங்களன்று தெற்காசியாவில் நிலவும் சூழ்நிலை குறித்து விவாதித்தார்.

ஒரு வாரத்திற்குள் இரு தலைவர்களுக்கும் இடையேயான இரண்டாவது தொலைபேசி உரையாடல் இதுவாகும். ஐ.நா. பொதுச்செயலாளரின் தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் தொடர்பு முயற்சிகளைப் பாராட்டிய பிரதமர் ஷெரீப், பதற்றத்தைத் தணிப்பதும், எந்தவொரு மோதலையும் தவிர்ப்பதும் அவசியம் என கூறினார்.

சுதந்திரமான, வெளிப்படையான, நடுநிலையான மற்றும் நம்பகமான விசாரணையை மீண்டும் வலியுறுத்தும் அதே வேளையில், இந்தியா இன்னும் எந்த ஆதாரத்தையும் வழங்கவில்லை என்றும், தொடர்ந்து ஆத்திரமூட்டும் பேச்சுக்கள் மற்றும் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிரதமர் தனது கவலையை வெளிப்படுத்தினார்.

பாகிஸ்தான் தனது இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் உறுதியை பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மீண்டும் வலியுறுத்தினார்.

பாகிஸ்தானின் பொருளாதார நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் சர்வதேச நிதி நிறுவனங்களை அரசியலாக்க இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்தும் பிரதமர் ஷெரீப் தனது தீவிர கவலையை வெளிப்படுத்தினார்.

தெற்காசியாவில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான தனது முயற்சிகள் குறித்து பிரதமரிடம், ஐநா பொதுச் செயலாளர் விளக்கினார். மேலும், இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினார்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எல்லையில் அருகே இந்தியா தாக்கலாம்: பாக். அமைச்சர் கவாஜா ஆசிப் எச்சரிக்கை



எல்லைக்கட்டுப்பாடு கோட்டின் எந்த ஒரு இடத்திலும் இந்தியா தாக்குதல் நடத்தலாம் என்று பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் கவாஜா ஆசிப் தெரிவித்துள்ளார். பஹல்காம் தாக்குதலுக்கு பின்பு இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய கவாஜா ஆசிப், "எல்லைக் கட்டுப்பாடு கோட்டின் எந்த இடத்திலும் இந்தியா தாக்குதல் நடத்தலாம் என்று தகவல்கள் கிடைத்துள்ளன. அந்தத் தாக்குதல் (பஹல்காம் தாக்குதல்) சம்பவம் குறித்து விசாரிக்க ஒரு சர்வதேச விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும் என்று பாகிஸ்தான் ஏற்கனவே கேட்டுள்ளது. அவ்வாறு நடந்தால் தாக்குதலில் இந்தியாவா வேறு ஏதாவது குழுக்கள் சம்பந்தப்பட்டுள்ளதா என்பது வெளிப்படும். பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியா ஆதாரமற்று குற்றம் சாட்டுவதும் தெளிவாகும்.

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் இருந்து பாகிஸ்தான் தொடர்ந்து அச்சுறுத்தல்களைச் சந்தித்து வருகிறது. கைபர் பக்துன்க்வா மற்றும் பாலுச்சிஸ்தான் பகுதிகளின் சமீபத்திய பயங்கரவாத அலைகள் இந்தியாவின் ஆதரவுடன் ஆப்கானிஸ்தானில் இருந்து இயக்கப்படுகிறது" என தெரிவித்தார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலா தலத்தில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 26 அப்பாவி சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இந்த கொடூர தாக்குதலை நடத்தியது பாகிஸ்தான் ஆதரவு பெற்ற லஷ்கர்-இ-தொய்பா என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அந்த தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ராணுவத்தின் உளவு அமைப்பு, தேவையான உதவிகளை செய்து கொடுத்து இருப்பதும் தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ) நடத்திய முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்தியா பாகிஸ்தானுக்கு எதிராக சிந்துநதி நீர் ஒப்பந்தம் நிறுத்தம், எல்லை மூடல், வர்த்தகம் நிறுத்தம், விசா ரத்து உள்ளிட்ட இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டது. பாகிஸ்தானும் இதற்கு பதிலடி தரும் வகையில் இந்திய விமானங்களுக்கு வான் பரப்பை தடைசெய்தல், வர்த்த தடை உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதனால் இரண்டு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் அதிகரித்து வருகிறது.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 06/05/2025

## விபத்து காரணமாக மூடப்பட்டன வீதிகள்

கனடாவில், ஒரோ-மேடோன்டே பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் ஏற்பட்ட விபத்தின் காரணமாக, ஹைவே 11 சாலையின் ஒரு பகுதி இரு திசைகளிலும்

02



# கனேடிய மாகாணத்தில் ட்ரம்புக்கும் ஆதரவாம்!

கனேடிய மாகாணமொன்றில், அமெரிக்கா வுடன் இணைய மக்கள் ஆதரவு தெரிவித் துள்ளமை குறித்த செய்திகள் வெளியாகி வருகின்றன.

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில், அம்மாகாண மக்களில் நான்கில் ஒருவர் அமெரிக்காவுடன் இணைவதற்கு ஆதரவாக இருக்கின்றமை தெரியவந்துள்ளது.

நனோஸ் என்னும் ஆய்வமைப்பு மேற்கொண்ட ஆய்வில், ஆல்பர்ட்டா மாகாணத்தில் வாழ்பவர்களில் 64 சதவிகிதம் பேர் தாங்கள் கனடாவில் இருப்பதுதான் சிறந்தது என கருத்து தெரிவித்துள்ளனர்.

02

# டொரண்டோ ரிவர்டேல் பகுதியில் இரட்டைக் கொலை; இளைஞர் கைது

ந்த மாதம் நடந்த இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ஒருவரை பொலிஸ் கைது செய்துள்ளனர்.

ஏப்ரல் 15 அன்று இரவு 11 மணியளவில், பெயின் அவென்யூ மற்றும் லோகன் அவென்யூ பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் கேட்டதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற அதிகாரிகள், இரண்டு ஆண்கள் துப்பாக்கி சூட்டு காயங்களுடன் பாதிக்கப்பட்ட நிலையில் கிடப்பதை கண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் மருத்துவமனைக்கு கொண்டு

03






# வாகன கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இளைஞன் கைது

கனடாவில் வாகன கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போமன்வில்லில் கடந்த சனிக்கிழமை காலை செய்தித் தாள் விநியோகஸ்தர் ஒருவரின் வாகனம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

கிளாரிங்டன் மற்றும் பிரின்ஸ் வில்லியம் புலவர்ட் சந்திப்பில் ஒரு செய்தித் தாள் விநியோகஸ்தர் தனது காரில் உட்கார்ந்திருந்தபோது, இரண்டு முகமூடி அணிந்த நபர்கள் அருகே வந்ததாக குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

அவர்களில் ஒருவர் துப்பாக்கியுடன் இருந்து, பாதிக்கப்பட்டவரை வலுக்கட்டாயமாக காரிலிருந்து இழுத்து வெளியேற்றினார் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இருவரும் அந்த வாகனத்தை ஏற்றி கொண்டு ஏரியாவிலிருந்து தப்பியோடினர் எனவும் பாதிக்கப்பட்ட நபருக்கு உடல் நல பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின் பொலிஸார் அந்த வாகனத்தை Highway 401 மேற்கு திசையில் பயணம் செய்யும் போது கண்டறிந்தனர்.

பின்னர் Ajax பகுதியில் உள்ள வெஸ்ட்னி சாலையில் வாகனம் விலகி ஒரு மின் தூணில் மோதி நின்றது.

சம்பவ இடத்திலிருந்து இரு சந்தேகநபர்களும் தப்பிச் சென்றதாக பொலிஸார் அவர்களை துரத்தியுள்ளனர்.

அதில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் மற்றவர் தப்பி ஓடியுள்ளார் என்றும் தெரிவித்தனர்.

## கனேடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும், 22 சதவிகிதம் பேர், அமெரிக்காவுடன் இணைவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஆல்பர்ட்டா மாகாண மக்களில் ஐந்தில் ஒருவர், கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக்கும் ட்ரம்பின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஆல்பர்ட்டாவில் வாழ்வோரில் 100,000 இற்கும் அதிகமானோர், கனடாவிலிருந்து பிரிவதற்கு ஆதரவாக வாக்கெடுப்பு நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்து இணையத்தில் பதிவு செய்துள்ளனர்.

## விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


மூடப்பட்டது.

மாலை 3.30 மணியளவில் ஒன்டாரியோ மாகாண பொலிஸ் சமூக ஊடகங்களில் வெளியிட்ட அறி விப்பின் படி, ஹைவே 11 சாலையின் வடக்கு மற்றும் தெற்கு வழித்தடங்கள், லைன் 12 மற்றும் லைன் 14 இடையே ஏற்பட்ட விபத்தினால் மூடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

விபத்து நடந்த இடத்தில் பொலிஸ் மற்றும் அவசர சேவை குழுக்கள் பணியில் ஈடுபட்டன.

வாகனங்களை சைட்ரோட் 15, 16 East மற்றும் Ridge Road East வழியாக மாற்றி அனுப்பப்பட்டன. மாலை 6:00 மணியளவில் தெற்கு திசை வீதி மீண்டும் திறக்கப்பட்டது.






# தேசிய அலர்ட் ரெடி அமைப்பின் சோதனை நடவடிக்கை நாளை

அவசர நேரங்களில் பொதுமக்களுக்கு எச்சரிக்கைகள் வழங்கப்படும் கனடாவின் தேசிய "அலர்ட் ரெடி" (Alert Ready) அமைப்பின் சோதனை வரும் புதன்கிழமை நாடு முழுவதும் நடத்தப்பட உள்ளது.

இந்த சோதனை, கியூபெக் மாகாணத்தை தவிர்த்து மற்ற எல்லா மாகாணங்களிலும் மற்றும் பிரதேசங்களிலும் நடைபெறும்.

மாகாண அல்லது பிராந்திய அவசர மேலாண்மை அமைப்புகள் வெளியிடும் சோதனை செய்திகள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் ஸ்மார்ட்போன்கள் போன்ற வயர்லெஸ் சாதனங்களில் பகிரப்படும்.

அவசர நிலையை ஒத்ததாக அமைக்கப்பட்ட இந்தச் செய்திகள், தனித்துவமான அலர்ட் சத்தத்துடன் ஆரம்பமாகும். இது ஒரு உண்மையான அவசர எச்சரிக்கை அல்ல, பொதுமக்களுக்கு அமைப்பின் செயல்பாடு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படுகிறது.

மாகாண வாரியாக சோதனை நேரங்கள் பின்வருமாறு:

- அல்பேர்டா - பிற்பகல் 1:55 (MDT)
- பிரிடிஷ் கொலம்பியா - பிற்பகல் 1:55 (PDT)
- மானிட்டோபா - பிற்பகல் 1:55 (CDT)
- நியூ ப்ரன்ஸ்விக் - காலை 10:55 (ADT)
- நியூபவுண்லாண்ட் மற்றும் லாப்ரடோர் - காலை 10:45 (NDT)
- நார்த் வெஸ்ட் டெரிடோரிஸ் - காலை 9:55 (MDT)
- நோவா ஸ்கோஷியா - பிற்பகல் 1:55 (ADT)
- நுனாவுட் - பிற்பகல் 2:00 (EDT)
- ஒன்ராரியோ - பிற்பகல் 12:55 (EDT)
- பிரின்ஸ் எட்வர்ட் தீவு - பிற்பகல் 12:55 (ADT)
- சஸ்காச்செவன் - பிற்பகல் 1:55 (CST)
- யுகோன் - பிற்பகல் 1:55 (YST)

2024-ஆம் ஆண்டிலிருந்து, இந்த அலர்ட் ரெடி அமைப்பு 877 அவசர எச்சரிக்கைகளை வெளியிட்டுள்ளது.

இதில், கடுமையான சூழ்நிலை எச்சரிக்கைகள், புயல், வெள்ளம், குழந்தைகள் கடத்தப்பட்டால் வழங்கப்படும் AMBER எச்சரிக்கைகள் ஆகியவை அடங்கும். பொதுமக்கள் இந்த அவசர எச்சரிக்கைகளை நிராகரிக்க முடியாது.

ஆனால், சில மொபைல் சாதனங்களில் (LTE அல்லது 5G இணைப்பு இல்லாதவை) அவை தோன்றாமலும் இருக்கலாம்.

## டொரண்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்ட போதும், அவர் அங்கு உயிரிழந்தார்.

அந்த நேரத்தில் பலர் பல துப்பாக்கிச் சத்தங்களை கேட்டதாகவும், "வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம்!" என சில அயலவர்கள் எச்சரித்ததாகவும் கூறியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஏறக்குறைய ஒரு மாத விசாரணைக்குப் பிறகு, மே 3ஆம் திகதி, 17 வயதான சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

18 வயதிற்கு குறைவானவர் என்பதால், அவரின் பெயர் வெளியிடப்படவில்லை. அவர்மீது இரண்டு கொலைக் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

பொலிஸார் மேலும் சந்தேகநபர்களை தேடுகிறார்களா என்பது தற்போது தெளிவாகவில்லை. இது டோரண்டோவில் இந்த ஆண்டில் நடந்த ஒன்பதாவது மற்றும் பத்தாவது கொலைச் சம்பவங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.